முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையில் அமைச்சரவை கூட்டம்

ரூ.15,610 கோடி புதிய தொழில் முதலீட்டு திட்டங்களுக்கு ஒப்புதல்

அமைச்சர் தங்கம் தென்னரசு தகவல்

சென்னை, ஜன.5–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அமைச்சரவை கூட்டத்தில், தமிழகத்தில் ரூ.15,610 கோடி மதிப்புள்ள புதிய தொழில் முதலீட்டு திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தங்கம் தென்னரசு கூறினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தமிழக அமைச்சரவை கூட்டம் சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று நடைபெற்றது. காலை 11.05 மணிக்கு தொடங்கிய கூட்டம், பிற்பகல் 12.40 மணிக்கு முடிவடைந்தது.

இந்த கூட்டத்தில் அமைச்சர்கள் எ.வ.வேலு, அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்கவில்லை. எ.வ.வேலு அரசு பணி நிமித்தமாக டெல்லி சென்றிருந்தார். அனிதா ராதாகிருஷ்ணன் ஒரு வழக்கு விசாரணை தொடர்பாக கோர்ட்டுக்கு சென்றிருந்தார்.

விளையாட்டுத்துறை அமைச்சராக புதிதாக பதவியேற்றுள்ள உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்ட முதலமைச்சரவை கூட்டம் இது ஆகும்.

இந்த மாதம் சட்டசபை கூட்டத்தொடர் 9ந் தேதி தொடங்க உள்ள நிலையில், முதல் நாள் கூட்டத்தில் கவர்னர் ஆர்.என். ரவி உரையாற்றுவார். கவர்னர் ஆற்றும் உரை, நேற்று அமைச்சரவை கூட்டத்தில் வைக்கப்பட்டு இருந்தது. அது பற்றி அமைச்சரவையில் ஆலோசிக்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டது.

அதுதவிர பல்வேறு புதிய தொழில்கள், ஏற்கனவே உள்ள தொழில்களின் விரிவாக்கங்களுக்கும் அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது. அது பற்றி தலைமைச்செயலகத்தில் பத்திரிகை யாளர்களுக்கு தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அளித்த பேட்டி வருமாறு:

தொழில்துறையில் புதிதாக பெறப்பட்டுள்ள முதலீடுகளுக்கு இந்த அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. அந்த வகையில், தமிழகத்தின் புதிய தொழில் முதலீடுகளாக பல்வேறு பிரிவுகளில் ரூ.15 ஆயிரத்து 610.43 கோடி அளவிலான திட்டங்களுக்கு ஒப்புதல் கிடைத்துள்ளது.

இந்த புதிய 8 தொழில் திட்டங்கள் மூலம் தமிழகத்தில் 8 ஆயிரத்து 776 வேலைவாய்ப்புகளை உருவாக்குவ தற்கான ஒப்புதலையும் அமைச்சரவை வழங்கியுள்ளது.

குறிப்பாக, மின்சார வாகனம் சம்பந்தப்பட்ட தொழில்கள், பேட்டரி உற்பத்தி தொழிற்சாலை, மின்சார வாகன உற்பத்தி, ஆட்டோமொபைல் தொழிற்சாலைகள், கம்பியில்லா தொழில்நுட்பங்கள், ஜவுளி மற்றும் ஆக்சிஜன் உற்பத்தி தொழிற்சாலை போன்ற பிரிவுகளில் முதலீடுகள் செய்யப்படுகின்றன. இந்த தொழில் முதலீடுகள் தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் பரவலாக அமையும்.

ஏற்கனவே தமிழகத்தில் மின்சார வாகன கொள்கை அமலில் உள்ளது. தற்போதைய மின்சார வாகன தொழில்களுக்கு ஏற்றவகையில் அதில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, மின்சார வாகனங்களுக்கான சாலை வரி செலுத்துவது தொடர்பான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. சில விதிவிலக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன. மின்சார வாகன உற்பத்தியில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. அதை தக்கவைப்பதற்கு ஏதுவாக அதற்கான கொள்கையில் மாற்றங்கள் கொண்டு வரப்படுகின்றன. சில தொழில் கொள்கைகளுக்கும் அமைச்சரவையில் ஒப்புதல் கிடைத்துள்ளது.

தமிழகத்தில் பரவலாக புதிய தொழில்கள் வந்தாலும், குறிப்பாக கிருஷ்ணகிரி மாவட்டத்திலும், அதன் அருகில் உள்ள போச்சம்பள்ளி உள்ளிட்ட சில பகுதிகளிலும் தொழில்கள் வருகின்றன. தேனி, புதுக்கோட்டை மாவட்டங்களிலும், சென்னையை ஒட்டியுள்ள பகுதிகளிலும் புதிய தொழில்கள் அமையவுள்ளன.

தென் தமிழகத்தில் ஏற்கனவே பல தொழில் முதலீடுகள் வந்துள்ளன. கிரீன் ஹைட்ரஜன் உற்பத்தி உள்ளிட்ட பல தொழில் முதலீடுகள் அங்குதான் வருகின்றன. குலசேகரபட்டினத்தில் ராக்கெட் ஏவுதளம் வரும் நிலையில் அதுதொடர்பான தொழில்கள் அங்குதான் வரும். கங்கைகொண்டானில் டாடா பவர் திட்டம் உள்ளது. தோலில்லாத காலணி உற்பத்தியும் தென் தமிழகத்தை நோக்கித்தான் வருகிறது.

பரந்தூர் விமான நிலையம் அமையவுள்ள பகுதியையொட்டி ஏற்கனவே பல தொழில் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. அமைச்சரவையில் ஒப்புதல் கிடைத்துள்ள மேலும் சில முதலீடுகள் அங்கு வருகின்றன. அங்கு விமான நிலையத்தை அமைப்பதற்காக அங்குள்ள மக்கள் கருத்துகளை கேட்டு, தொழில்நுட்ப சாத்தியக்கூறுகளையும் அறிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் எந்தெந்த நிறுவனங்கள் தொழில் தொடங்குகின்றன என்பது புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யும்போது அறிவிக்கப்படும். உலகப் பொருளாதார மாநாடு, தமிழகத்தில் தொழில் தொடங்கு வதற்கான சாதக அம்சங்கள் பற்றி எடுத்துரைக்க வாய்ப்பாக அமைந்துள்ளது.

தமிழகத்தில் 2010ம் ஆண்டில் இருந்து தொடங்கியுள்ள தொழில் முதலீடுகள் மூலம் நம் மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு 87 சதவீதம் வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. இதை ஆய்வு மூலம் தொழில்துறை கண்டறிந்துள்ளது. குறிப்பிட்ட தொழில் என்றல்லாமல், பரவலாக பல தொழில்கள் தமிழகத்துக்கு வந்துகொண்டிருக்கின்றன.

இவ்வாறு அவர் கூறினார்.

விருப்பமுள்ளவர்கள் இந்தியை படிக்கலாம்: தமிழ், ஆங்கிலத்தை கட்டாயம் படிக்க வேண்டும்

சென்னை, ஜன.5–

சென்னை பல்கலைக்கழகத்தில் கவிஞர் தமிழ் ஒளி நினைவு அறக்கட்டளை தொடக்க விழா நேற்று நடந்தது. இந்த விழாவுக்கு உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி தலைமை தாங்கினார். இதில் பல்கலைக்கழக துணைவேந்தர் கவுரி முன்னிலை வகித்தார். நினைவு அறக்கட்டளையை தொடங்கி வைத்த அமைச்சர் பொன்முடி, விழாவில் பேசியதாவது:

தமிழகத்தில் தமிழ் பாடமே படிக்க முடியாத சூழ்நிலை உள்ளது. அதிலும் தனியார் கல்லூரிகள், சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் தமிழ் பாடமே படிக்க முடியவில்லை. இதனை மாற்றியமைக்க வேண்டும். அதனை கருத்தில் கொண்டுதான், மாநில கல்விக்கொள்கையை உருவாக்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கல்விக்கொள்கைக்குழுவை உருவாக்கியுள்ளார். அனைவரும் தமிழுக்கு முதலில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். தமிழை முழுமையாக படிக்க அனைவரும் முன் வரவேண்டும். தமிழ்த்தாய் வாழ்த்து பாடலுக்கு இசையை மட்டும் ஒலிபரப்பாமல்,

அமைச்சர் பொன்முடி பேச்சு

அனைவரும் சேர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்து பாடலை பாட வேண்டும். தமிழகத்தை பொருத்தவரையில், இருமொழி கொள்கை தான் பின்பற்றப்படும். தமிழ், ஆங்கிலம் மட்டும் படித்தால் போதும். அதுதான் கட்டாய பாடமாக இருக்க வேண்டும். விருப்பமுள்ளவர்கள் இந்தியை படிக்கலாம். ஆனால் அதை கட்டாய பாடமாக திணிக்கக்கூடாது.

இவ்வாறு அவர் பேசினார்.

பொது அறிவிப்பு

எங்கள் கட்சிக்காரர் ஜேப்பியார் எஜூகேஷனல் டிரஸ்ட் அலுவக எண் – பழைய எண் – 12, புதிய எண் 29A, கணபதி தெரு, ராயப்பேட்டை, சென்னை – 600 014, சொந்தமான சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் தாலுகா, செம்மேஞ்சேரி கிராமத்தில் அடங்கிய கீழே தெளிவாக விவரிக்கப்பட்ட நிலங்களுக்கும் மற்றும் அதன் அருகிலுள்ள இதர நிலங்களுக்கும் முழுமையான உரிமையாளர்கள் ஆவார்கள்.

மேற்சொன்ன சொத்து சம்பந்தமான கீழ்கண்ட அசல் ஆவணங்கள் காணாமல் போய்விட்டன என்றும் அவற்றை கண்டுபிடிக்க முடிய வில்லை என்றும் எங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

Sl. No.	OLD SURVEY NUMBER	EXTENT IN ACRES	SALE DEED DATE & DOCUMENT NUMBER	SUB REGISTER OFFICE	PURCHASED FROM
1	208/1A	0.05	28.8.2001 3184/2001	Neelankarai	Mr.M.K.Abdul Kuthus
2	208/3A	0.05			
3	209	0.27	10.12.2005 7005/2005	Neelankarai	Mrs.C.Vijayarajeswari
4	234/3B	0.18	25.8.2005 4915/2005	Neelankarai	Mr.C.Muthu and others
5	235/Part	0.06			
6	219/3Apart	0.45	10.12.2005 6999/2005	Neelankarai	Mrs.C.Vijayarajeswari
7	219/3Bpart	0.26	27.3.2001 747/2001	Neelankarai	Mrs.K.Bothu Rajan and others
8	356/1	1.00	19.4.2001 1089/2001	Neelankarai	Mr.PL.Muthukaruppan
9	356/2	1.00	19.4.2001 1089/2001	Neelankarai	Mr.PL.Muthukaruppan
10	356/3	2.00	2679/1989	Adyar	P.Sundaram and others
11	356/4	3.32	1307/1998 4760/1996	Neelankarai Adyar	Mrs.Aysha Abdul Hakeem & Mr.Bakthavatchalu Raju and others
12	371/1B	0.94	2939/1989	Adyar	Mrs.Kuppammal
13	371/1C	0.44	22.6.1989 2587/1989	Adyar	Mr.Selva Durai Rep. by his POA Mr.V.Ponnuswamy
14	371/1F	1.01	27.3.2001 855/2001	Neelankarai	Mrs.Vedhavalli and others
15	371/1G	0.38	22.6.1989 2612/1989	Adyar	Mr.Vinayagam rep. by his POA Mr.V.Ponnuswamy
16	370	2.09	20.7.1989 3034/1989	Adyar	Mrs.Saroja Ammal
17	370	3.00	18.7.1989 2940/1989	Adyar	Mrs.Marry Ammal
18	370	5.00	18.7.1989 2941/1989	Neelankarai	D.Karthigayan
19	388/1	2.54	22.6.1989 2052/1989 2221/1989	Adyar	Mr.Durai & Mr.Natarajan
20	388/3	2.06	11.7.1989 2245/1989	Adyar	Mrs.Mary Ammal
21	388/4	2.01	24.7.1989 2441/1989	Adyar	Mr.Rahamathullah
22	389/4	1.01	26.7.1989 2653/1989	Adyar	Mrs.Gunavalli
23	389/5	1.00	26.7.1989 2617/1989	Adyar	Mr.Dhanagopal Chettiar
24	390/1	0.94	6.2.2006 640/2006	Neelankarai	Mrs.Sheela
25	390/2	0.96	26.8.1996 4260/1996	Adyar	Mr.G.Murthy.
26	390/3	0.96	2050/1994	Adyar	Mrs.Fathima Bhanu and others
27	390/4	0.98	1712/2019	Neelankarai	Mr.S.H.Abdul Kadhar
28	390/6	0.95			
29	390/7 Check survey no	0.96	2649/1989	Adyar	Mr.Thirunavukarasu
30	390/8	0.96	640/2006	Neelankarai	Mrs.Sheela
31	390/9A	0.46	3142/1989	Adyar	Chokkammal
32	390/9B	0.52	3142/1989	Adyar	Chokkammal
33	390/10	0.99	3142/1989 3181/2001	Adyar	Chokkammal Johnson and others
34	369/3A, 369/3B	0.99	2647/1998 1860/1998	Neelankarai	Arumugam and others & Kasi and others
35	391/2	0.91	16.4.1996 2005/1996	Adyar	Mrs.Jayasundari
36	391/4	0.99	3.7.1996 3426/1996	Adyar	Mrs.Thulukanathammal and others
37	397/1	5.95	30.12.2004 7390/2004 Doc NA	Neelankarai	Mr.Jawaharlal and others
38	397/2A	1.96	141, 142/2004	Neelankarai	Selvaraj and others
39	397/2B	0.99	141/2004	Neelankarai	Mr.P.Mani and others
40	397/2C	1.03	7001/2005	Neelankarai	Mrs.C.Vijayarajeswari
41	397/2D	1.03	7001/2005	Neelankarai	Mrs.C.Vijayarajeswari
42	398/1	5.21	13.5.2005 2897/2005 DOC NA	Neelankarai	Mr.J.Kishore
43	398/2	5.21	17.12.2003 4285/2003	Neelankarai	Mr.G.J.Jawaharlal
44	404/2	0.80	22.6.1989 2614/1989	Adyar	Mrs.M.Sivakami
45	387/5	1.98	17.7.1989 2366/1989 and 2011/1989	Adyar	Mrs.Lakshmi and others Duraisamy and others
46	387/6	0.99	19.4.2001 1114/2001	Neelankarai	Mr.P.L.Muthukaruppan
47	220/1A	0.61	6999/2005	Neelankarai	Mrs.C.Vijayarajeswari
48	220/1B	0.59	27.3.2001 747/2001	Neelankarai	Mrs.K.Bothu Rajan and others
49	220/2A1	0.32	6999/2005	Neelankarai	Mrs.C.Vijayarajeswari
50	220/2A2	0.31	27.3.2001 747/2001	Neelankarai	Mrs.K.Bothu Rajan and others
51	391/8A	0.49	3847/1994	Adyar	Munivel @ Munusamy
52	391/8B	0.49	3847/1994	Adyar	Munivel @ Munusamy
	Total	**70.27**			

மேற்குறிப்பிட்டுள்ள காணாமல் போன அசல் ஆவணங்கள் மீது எந்த நபர் நிறுவனத்துக்கேனும் பாத்தியதை இருப்பின் அவரது கோரிக்கை அல்லது ஆட்சேபத்தை ஆதாரத்துடன் இணைத்து கீழ் கையப்பமிட்டவருக்கு இந்த அறிவுப்பு வெளியான 10 நாட்களுக்குள் தாக்கல் செய்ய வேண்டும் அவ்வாறு ஏதும் பெறப்படாத பட்சத்தில் மேற்சொன்ன சொத்தில் எந்தவித கோரிக்கை அல்லது வில்லங்கமும் இல்லை என்று கருதப்படும் அதன் பின்னர் வருகின்ற கோரிக்கை அல்லது ஆட்சேபணைகள் தள்ளுபடி செய்யப்படும் மற்றும் அது எந்தவிதத்திலும் எங்களது கட்சிக்காரரை கட்டுப்படுத்தாது.

சேஷாத்ரி அண்ட் கம்பெனி
வழக்கறிஞர்கள்

அலுவக முகவரி
எண் T58B, புதிய எண் 29, 32 வது குறுக்கு தெரு,
பெசன்ட் நகர், சென்னை – 600 090,
தொலைபேசி எண்கள் – 24914001 / 24914002
ஈமெயில் – advocateseshadri@gmail.com

நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் திட்டப் பணிகளை முடிக்க வேண்டும்: அதிகாரிகளுக்கு அமைச்சர் கே.என்.நேரு உத்தரவு

சென்னை, ஜன.5

குறிப்பிட்ட காலத்துக்குள் திட்டப்பணிகளை முடித்து பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அமைச்சர் கே.என்.நேரு உத்தரவிட்டார்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் 2021–22 மற்றும் 2022–23 ஆகிய நிதியாண்டுகளில் அறிவிக்கப்பட்ட மானிய கோரிக்கை அறிவிப்புகள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, சென்னை குடிநீர் வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை, தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்த ஆய்வு கூட்டம் சென்னை தலைமை செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

கூட்டத்துக்கு நகராட்சித்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமை தாங்கினார்.

இந்த கூட்டத்தின் போது, அரசாணைகள் வெளியிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டுவரும்பணிகளின் முன்னேற்றம் குறித்தும், அரசாணை வெளியிடுவதற்கு தேவையான நிதி ஆதாரங்களை பெறுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை குறித்தும் அமைச்சர் ஆய்வு செய்தார்.

கடந்த 20 மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணி களின் தற்போதைய நிலை குறித்து ஆய்வு மேற்கொண்ட அமைச்சர், நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் அனைத்து திட்ட பணிகளையும் நிறைவு செய்து பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உத்தரவிட்டார்.

கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமை செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரான கூடுதல் தலைமை செயலாளர் சாய்குமார், நகராட்சி நிர்வாக இயக்குநர் பொன்னையா மற்றும் உயர் அலு வலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னையில் 7ந்தேதி ஆதார் தினம்: தபால் துறை ஏற்பாடு

சென்னை, ஜன.5–

சென்னை தி.நகர் தலைமை தபால் நிலையம், சூளைமேடு, கிரீம்ஸ்சாலை, தி.நகர் வடக்கு தபால் நிலையங்கள், மயிலாப்பூர் தலைமை தபால் நிலையம், கோபாலபுரம், ராயப்பேட்டை, தேனாம்பேட்டை, திருவல்லிக்கேணி ஆகிய தபால் அலுவலகங்களில் வருகிற 7ந்தேதி காலை 7 மணியிலிருந்து இரவு 10 மணி வரை ஆதார் மெகா தினம் நடைபெற உள்ளது.

இதில் ஆதார் புதிய பதிவுகள், முகவரிபுதுப்பிப்பு, புகைப்படம், பயோ மெட்ரிக் பதிவு, பெயர், பாலினம், பிறந்த தேதி பதிவு, செல்போன், இமெயில் பதிவு, 5 வயது மற்றும் 15 வயது சிறுவர், சிறுமியருக்கான கட்டாய பயோ மெட்ரிக் பதிவு செய்யப்படுகிறது. இதுதவிர, டிரஸ்டு புரம் சென்னை நடுநிலைப்பள்ளி, தியாகராயநகர் ஜெயின்பள்ளி, பாலு முதலி தெரு விசாலம் குடியிருப்பு, மயிலாப்பூர், சித்திரைகுளம் பி.கே. மஹால், ஆசாத் நகர் ரத்தம்மாள் தெரு, சேப்பாக்கம் இந்து மேல்நிலைப்பள்ளி, ராயப்பேட்டை, ஜவகர் உசேன் தெரு குடியிருப்போர் நலசங்கம், போயஸ் சாலை 1வது தெரு அங்கன்வாடி, ஏரிபகுதி 4வது தெரு, அங்கன்வாடி பள்ளி, ராயப்பேட்டை, ஜி.எம்.சாலை ஸ்ரீவெங்கடேஸ்வரா மெட்ரிகுலேஷன் பள்ளியில் முகாம்கள் நடத்தப்படுகிறது. புதிய பதிவுகள் இலவசம், திருத்தங்களுக்கு கட்டணங்கள் செலுத்த வேண்டும்.

சேமிப்புக் கிடங்கு நிறுவனத் தலைவராக முன்னாள் எம்.எல்.ஏ. ரங்கநாதன் நியமனம்

சென்னை, ஜன.5

முன்னாள் எம்.எல்.ஏ. ரங்கநாதனை தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் தலைவராக நியமித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள அரசாணையில், முன்னாள் எம்.எல்.ஏ. ப.ரங்கநாதன், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். விதிமுறைகள் மற்றும் பணி தொடர்பான விவரங்கள் பின்னர் தனியாக வெளியிடப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

NAME CHANGE

I, Raasiraju Indu, wife of Thiru Ashwin Kumar Kondooru, born on 20th September 1996 (District of Birth: Chennai), residing at No.2786, G2, 12th Main Road, Y-Block, 6th Street, Anna Nagar, Chennai-600040 shall henceforth be known as INDU KONDOORU-

RAASIRAJU INDU

Place: Chennai,
Date: 15th December 2022

Name Change

I, **Meenatchi**, with **old Surname Chandran,** W/o. Mr. Raja Sekar, D.o.B 30.05.1988, residing at D.No.161, Krishnagiri Main Road, Bargur, Bargur R.F., Krishnagiri, Tamilnadu - 635 104 shall hence forth **Meenatchi** be known as with **new Surname Raja Sekar.**

Meenatchi

அசல் நிலம் / சொத்து ஆவணம் தொலைந்தது

பிளாட் எண்.231, கொரட்டூர், பெரியார் நகர், 4வது தெரு, சென்னை-600080 என்ற முகவரியில் எனது தந்தை திரு.கே.கருப்பையர் (லேட்) வாங்கிய அசல் நில ஆவணத்தை வளசரவாக்கத்தில் தொலைத்துவிட்டேன் அண்ணாநகர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட அசல் ஆவண எண். 598 of 1988 தேதி 18.02.1988 இந்த ஆவணத்தை யாராவது கண்டுபிடித்தால் தயவு செய்து என்னை தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும். (9840231033) அல்லது கீழே உள்ள முகவரியில் ஒப்படைக்க கேட்டுக் கொள்கிறேன்.

K. BASKAR,
No.113, 4th street, Krishnamachari Nagar,
Alapakkam, Chennai – 600116.

PUBLIC NOTICE

Notice is hereby given that the Share Certificate No(s) 3015 for 500 Shares, Folio No 026288 bearing distinctive No(s) 2012831 – 2013330 standing in the name of Shantidevi Roongta Joint with Gaurishanker Roongta (Deceased) in the books of M/s Dalmia Bharat Limited, has/have been lost/misplaced/Destroyed and the advertiser has/have applied to the Company for issue of duplicate share certificate(s) in lieu thereof. Any person(s) who has/have claim(s) on the said shares should lodge such claim(s) with the Company's Registrars and Transfer Agents KFIN TECHNOLOGIES PRIVATE LIMITED. SELENIUM TOWER B, PLOT NO 31 & 32, GACHIBOWLI, FINANCIAL DISTRICT, NANAKRAMGUDA, SERILINGAMPALLY, HYDERABAD – 500032, TELENGANA, TOLL Free No: 1800-309-4001 within 15 Days from the date of this notice failing which the Company will proceed to issue duplicate share certificate(s) in respect of he said shares.

Date: 05/01/2023
Place: Tamil Nadu

Name(s) of the Shareholder(s)
Shantidevi Roongta
Gaurishanker Roongta (Deceased)

**V Asst. CITY CIVIL COURT,
CHENNAI-104.
I.A. No. 1 of 2019 In
O.S. No. 2960 of 2007**

Thiru A.C. Shanmugam
Petitioner/Plaintiff
-Vs-
C. Vedha Arun Nagarajan
and others
Respondents/Defendants.

To
Thiru. P.K. Ali Akbar,
No. 49, A/4, Alanthur Road,
Saidapet, Chennai 600 015.
2nd Respondent/
2nd Defendant in the Suit

Please take notice that the Plaintiff has filed the above petition to under order 1 rule 10 (2) C.P.C. for amendment the word "in-law" suffix the word father in page 3 para 6, n" line has to deleted. His honour the V Asst. Judge, City Civil Court, Chennai 104 has ordered notice by paper publication, returnable on 25:01:2023 at 10.30 A.M. Please be present in person at the above said day, time and court, failing appearance, the above suit will be heard and decided setting you exparte.

Yours truly,
Md. SULAIMAN BASHA,
Counsel for Petitioner/Plaintiff

ஆன்லைன் இ–ஏல முறையில் சொத்து விற்பனை

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

kotak Kotak Mahindra Bank

பதிவு அலுவலகம்: 27BKC, C–27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு – 400 051
கிளை அலுவலகம்: எண். 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை–600 006.

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 8(6)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு

சிட்டி பேங்க் என்ஏ–ஆல் கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், ஈடுபெற்ற கடன் அளித்தவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் சிட்டி பேங்க் என்ஏ–ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டது என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்)க்கு குறிப்பாகவும் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. திரு. கார்த்திக் வி மற்றும் திருமதி ராதா எஸ். ஆகியோர் ஈடுபெற்ற கடன் அளித்தவர்களான கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு கடன் கணக்கு எண்.424067/–ன்கீழ் 03.01.2023 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ரூ.5870748.19/– (ஐம்பத்தெட்டு லட்சத்து எழுபதாயிரத்து எழுநூற்றுநாற்பத்தெட்டு மற்றும் பத்தொன்பது பைசா மட்டும்) மற்றும் 04.01.2023 முதல் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் உங்களால் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் அவை ''எங்கு எப்படி உள்ளதோ அப்படியே'' என்ற அடிப்படையில் 08.02.2023 பகல் 12.00 மணி முதல் 1.00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்பில் விற்பனை செய்யப்படும். குறைந்தபட்ச விலை: ரூ.28,00,000/– (ரூபாய் இருபத்தெட்டு லட்சம் மட்டும்) மற்றும் முன்வைப்புத் தொகை ரூ.2,80,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்). கேஒய்சி உடன் முன்வைப்புத் தொகையை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 07.02.2023 அன்று மாலை 6.00 மணி (இந்திய நேரப்படி) வரை.

சொத்து விவரம்: : கல்பனா பிளாட்ஸ், ப்ளாட் எண் ஜி2 தரை தளம், பிளாக் பி, எண் 5 மற்றும் சி, அஞ்சுகம் நகர், 8வது தெரு, கொளத்தூர், சென்னை 600099 அட்டவணை ஏ: அஞ்சுகம் நகரில் அமைந்துள்ள காலி நிலம் மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். 8வது தெரு, கொளத்தூர் சென்னை 600099, எஸ். எண். 145/2சி, டி.எஸ். எண்கள். 35 மற்றும் 36, பிளாக் எண் 53, கொளத்தூர் கிராமம், பெரம்பூர் புரசைவாக்கம் தாலுக்கா, சென்னை மாவட்டம், சென்னை மாநகராட்சியின் எல்லைக்குள் அமைந்துள்ளது. விஸ்தீரணம் 4975 சதுர அடி. எல்லை: வடக்கில்: மனை எண் 4, தெற்கில்: எஸ். எண் 145/4ஏ6ல் உள்ள நிலம், கிழக்கில்: எஸ். எண் 145/3ல் உள்ள நிலம், மேற்கில்: அஞ்சுகம் நகர் 8வது தெரு (24 அடி சாலை) வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் செம்பியம் துணைப் பதிவு மாவட்டம், அட்டவணை பி: 357 சதுர அடி, அல்லது 33.17 சதுர மீட்டர். குறிப்பிடப்பட்ட சொத்தின் பிரிக்கப்படாத பங்கு அதாவது (4975 சதுர அடியில் 357 சதுர அடி, மற்றும் 816 சதுர அடி. தரைத்தளத்தில் பிளாட் ஜி2 என எண்ணப்பட்ட கட்டிடம், "கல்பனா அபார்ட்மெண்ட்ஸ்'', கதவு எண் 5&6, அஞ்சுகம் நகர் 8வது தெரு, கொளத்தூர், சென்னை 600099.

சர்பாசி சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தத்தின் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் திரு. விஷால் ஆதிசேஷன் (+91 9941016600), திரு. நாகராஜ் கே (+91 8296621749), திரு. சியாம் நம்பூரி(+91 9677288418.) திரு. ராஜேந்திர தஹியா (+91 8448264515) ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.comல் அளிக்கப்பட்டுள்ள லிங் http://www.kotak.com/en/bank–auctions.html and/or on https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.

இடம் : சென்னை, தேதி: 05.01.2023 **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**

ஆன்லைன் மூலம் இ–ஏல முறையில் சொத்து விற்பனை

போனிக்ஸ் ஆர்க் பிரைவேட் லிமிடெட்

Phoenix ARC

பதிவு அலுவலகம்: தனி கார்ப்பரேட் பார்க், 5–வது தளம், 158, சி.எஸ்.டி. ரோடு,
கலினா, சாந்தாகுரூஸ் (இ), மும்பை–400 098. Tel: 022-–6741 2314, Fax: 022- 6741 2313
CIN: U67190MH2007PTC168303 Email: info@phoenixarc.co.in Website: www.phoenixarc.co.in

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 8(6)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு

பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட் மூலம் அதன் சார்பாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் 18.07.2022 அன்று போனிக்ஸ் ஆர்க் பிரைவேட் லிமிடெட்டின் (போனிக்ஸ் டிரஸ்ட் எப்ஒய் 19–5ன் திட்டம் 1ன் டிரஸ்டியாக செயல்படுகிறார்) (பிஏஆர்சி) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டது என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்)க்கு குறிப்பாகவும் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. ஈடுபெற்ற கடன்தாரரான M/s. ஸ்ரீ சாய் ஏஜென்சீஸ் அதன் உரிமையாளர் உமா மகேஸ்வரி மூலம், திருமதி. உமா மகேஸ்வரி எஸ், திரு. ஸ்ரீனிவாசன் ஆகியோர் பிஏஆர்சி–க்கு, கடன் கணக்கு எண் 458LAP38797690 –ன் கீழ் 3.1.2023 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ரூ.74,27,522/–(ரூபாய் எழுபத்துநான்கு லட்சத்து இருபத்தேழாயிரத்து ஐநூற்றுஇருபத்திரண்டு மட்டும்) மற்றும் 4.1.2023 அன்று முதல் திரும்ப செலுத்தும் நாள் வரையில் மேலும் வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் உங்களால் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் அவை ''எங்கு எப்படி உள்ளதோ அப்படியே'' என்ற அடிப்படையில் 17.2.2023 அன்று பகல் 12.00 மணி முதல் 1.00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்பில் விற்பனை செய்யப்படும். குறைந்தபட்ச விலை: ரூ.33,00,000/– (ரூபாய் முப்பத்துமூன்று லட்சம் மட்டும்) மற்றும் முன்வைப்புத் தொகை ரூ.3,30,000/– (ரூபாய் மூன்று லட்சத்து முப்பதாயிரம் மட்டும்). கேஒய்சி உடன் முன்வைப்புத் தொகையை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 16.2.2023 அன்று 7.00 மணி (இந்திய நேரப்படி) வரை.

சொத்தின் விவரம்: அஞ்சல் முகவரி: கதவு எண்.45, இரண்டாவது தளம், எஸ்எப்2, சாய் அபார்ட்மெண்ட், 1வது குறுக்குத் தெரு, பாரதி நகர், கருவாடிகுப்பம், பாண்டிச்சேரி 605008

மேலும் குறிப்பாக விவரிக்கப்பட்டவை:2227 சதுர அடியில் பிரிவுபடாத பங்கு 540 சதுர அடி நிலம் மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். கிராமம் எண்.39, கருவாடிக்குப்பம் வருவாய் கிராமம், பாரதி நகர், 1வது பிரதான சாலை, ஆர்.எஸ்.எண்.138/1பி, கடாஸ்ட்ரே எண்.489 பைபார்ட், பட்டா எண்.938 ப்ளாட்டின் சூப்பர் கட்டிடப்பகுதி விஸ்தீரணம் 1331 சதுர அடி, இரண்டாவது தளம், எஸ்எப்2, கதவு எண்.45, சாய் அபார்ட்மெண்ட், 1வது குறுக்குத் தெரு, பாரதி நகர் கருவாடிக்குப்பம் பாண்டிச்சேரி–605008

சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தத்தின் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து திரு. விஷால் ஆதிஷேசன் (+91 9941016600), எம்.ஆர். சூரிய பெரியசாமி (+91 9600222111), திரு. விஜய் குமார் மேனன் (+91 9940572248), திரு. வேல்முருகன் கதிர்வேல் (+91 9884718338) & திரு. ராஜேந்தர் தஹியா (+91 8448264515) ஆகியோரை ஏலதாரர் தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு போனிக்ஸ் ஆர்க் பிரைவேட் லிமிடெட்டின் இணையதளம் www.phoenixarc.co.inல் அளிக்கப்பட்டுள்ள லிங் https://phoenixarc.co.in?p=2852 and /or on https://bankauctions.inல் பார்வையிடலாம்.

இடம்: பாண்டிச்சேரி
தேதி: 05.01.2023

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, போனிக்ஸ் ஆர்க் பிரைவேட் லிமிடெட்டுக்காக
(போனிக்ஸ் டிரஸ்ட் எப்ஒய் 19–5 திட்டம்–1ன் டிரஸ்டியாக செயல்படுகிறார்)